# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

**எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.**

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ).

************

முறையீட்டு மனு எண்: 0077/2017/ந

ஆணை எண்: 162/2017

நாள்: 19/06/2017

திரு. S. ராகவேந்திர குமார்,
பல்லவபுரம்,
சென்னை – 600 043. - முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி. - எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. S. ராகவேந்திர குமார் என்பவரது 12.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு அன்றே இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0077/2017 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் காஞ்சிபுரம் மாவட்டம், பல்லவபுரம் நகராட்சி, வார்டு எண்.3ல் உள்ள கண்ணபிரான் தெருவிலிருந்து பிரிந்து செல்லும் பல குறுக்குத் தெருக்களுக்கு பெயர்கள் எதும் சூட்டப்படவில்லை எனவும் பெயர் பலகை இல்லாததால் அத்தெருக்களில் வசிப்பவர்களை தேடி வருபவர்களுக்கும், தபால்களை வழங்குவதிலும் சிரமங்கள் ஏற்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து 09.02.2016ல் பல்லவபுரம் நகராட்சி ஆணையருக்கு மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 25.05.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளிக்குமாறு முறையிட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பல்லவபுரம் நகராட்சி ஆணையருக்கும் தனித்தனியே அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. இதனிடையே பல்லவபுரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.6207/16/இ1 நாள்:04.05.2017, இம்முறைமன்ற நடுவத்திற்கு 11.5.2017 அன்று வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டுள்ள விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

"பல்லவபுரம் நகராட்சி மொத்தம் 42 வார்டுகள், 1027 தெருக்கள் கொண்டுள்ளது. இவற்றில் முக்கிய சாலை சந்திப்புகள், முக்கிய பிரதான சாலைகளில் நகராட்சி மூலம் 351 தெரு பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதி மிகவும், குறுகலான குறுக்கு சந்துகள் ஆகும். இத்தெருக்களின் பிரதான சாலையான கண்ணபிரான் தெருவில் பெயர்ப்பலகை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரரால் தொடர்ந்து வழங்கப்பட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு கோரிக்கை எண்.295635/2016 நாள்:17.10.2016, தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு ஆகிய மனுக்களின் மீது உரிய பதில்கள் நகராட்சியால் அளிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கோரியுள்ள கோரிக்கை நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமையில் நிறைவேற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."

25.05.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான பல்லவபுரம் நகராட்சி ஆணையர் பல்லவபுரம் நகராட்சி வார்டு எண்.9ல் உள்ள கண்ணபிரான் தெருவிலிருந்து 24 குறுக்குத் தெருக்கள் உள்ளன எனவும் அவை 5 அடி முதல் 10 அடிக்குட்பட்ட அகலத்தில் உள்ளன எனவும் இத்தெருக்களின் உள்ள குடியிருப்பு பகுதிகள் அங்கீகாரம் பெறாமல் தாங்களாகவே அப்பகுதி மக்கள் உருவாக்கிக் கொண்டவையெனவும் தெரிவித்தார். இருப்பினும் தற்பொழுது அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்காத அளவில் சிறிய அளவிலான பெயர் பலகைகளை ஒரு மாத காலத்திற்குள் சுவர்களில் பொறுத்திட தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து தனது வாக்குமூலத்தை நகராட்சி ஆணையர் சமர்ப்பித்துள்ளார். அதே நாளன்று (25.05.2017) விசாரணைக்கு ஆஜரான முறையிட்டு

மனுதாரர் தான் வசிக்கும் கட்டிடத்தை உரிய அங்கீகாரம் பெற்று கட்டியுள்ளதாக குறிப்பிட்டு முறையிட்டு மனுவில் கோரிய தனது கோரிக்கையினை மீள வலியுறுத்தினார். மேலும், முறையீட்டு மனுதாரர் தனது 26.05.2017 நாளிட்ட கடிதத்தில், தனது குடியிருப்பு கட்டிடத்தின் வரைபட நகலினை அனுப்பி வைத்துள்ளார். அதனைப் பரிசீலித்ததில் இசா பல்லவபுரம் (s)-ல் புல எண்.39/1, புதிய புல எண்.39/1A-ல் பல்லவபுரம் நகராட்சியால் 28.02.2006ல் (கடித எண்.883/06 F1 நாள்:28.02.2006) கட்டிட வரைபட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதென தெரிகிறது.

இந்நிலையில் நகராட்சி ஆணையர் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படா வண்ணம் சிறிய அளவிலான பெயர் பலகைகள் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்வதாக உறுதி அளித்துள்ளதன் மூலம் மனுதாரரது கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது. எனவே, இம்முறையீட்டு மனுவின் மீதான மேல் நடவடிக்கை கைவிடப்படலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

எனவே முறையீட்டு மனுதாரர் மேலும் தகவல்களுக்கு இப்பொருள் குறித்து பல்லவபுரம் நகராட்சி ஆணையரை தொடர்பு கொள்ளுமாறு வலியுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திரு. S. ராகவேந்திர குமார்,
   **89, கன்னைபிரான் கோயில் தெரு,**
   பல்லாவரம்,
   சென்னை – 600 043.
2. நகராட்சி ஆணையர்,
   பல்லாவரம் நகராட்சி, குரோம்பேட்டை, சென்னை – 600 044.